முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1395

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.07.2023**, செவ்வாய்கிழமை

1. பிரம்ம சூட்சும ரகசியம் கண்ட
பிரணவ சக்திமிகு சித்திகள் அடைந்த
சரவணச்சுடரேற்றி இந்த உலகிற்கு
சற்குருவாய் அற்புதம் நடத்துகின்ற

2. நடத்துகின்ற ஆறுமுக அரங்கனே
ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தடையற ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 09 ம் நாள், 25.07.2023, செவ்வாய்கிழமை)
தக்கபடி தொடர்ந்து அருளிடுவேன்

3. அருளவே அரங்கன் சக்தி கூடிட
ஆறுமுகன் சூட்சும பலமாக
வரங்கள் தந்து நித்தம் நித்தம் ஆற்றல்பெருக்க
வையகத்தில் அரங்கன் சக்தி இன்னும் கூடி வருகுதப்பா

4. அப்பனே அரங்கன் மார்க்கம் கொண்டு
அகிலத்தை அற்புதம் நடத்த உள்ளேன்
ஆற்றல்பட அரங்கனைத் தேடி அன்பர்கள் கூட்டம்
அலைஅலையாய் தேடி வந்து இனிதே

5. வரம்பெற்று செல்லச்செல்ல வையகத்தில்
வடிவேலன் யான் அரங்கன் தீட்சையாக வலம் வருவேன்
வலம் வந்து அவரவர்க்குள்ளே
வல்லமைபட ஞானத்தை பதித்து இனிதே

6. ஞானவான்கள் படை என்கின்ற பெருநிலையை ஞாலமெல்லாம் நடத்தி
இனிதே அற்புதத்தை அரங்கனைக் கொண்டே நடத்துவேன்
ஆற்றல்பட அரங்கனைத் தேடி ஐயமற தீட்சை பெறும் மக்களுக்கு
ஆறுமுகன் என் அருளும் காட்சியும் வரமும் பரிபூரணமாய் உண்டு உண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—